கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சு

SME Pavilion | லங்காபெக் கண்காட்சி 2026

ORGANIZED BY
Sri Lanka Institute of Packaging

EVENT ORGANIZER
CDC EVENTS & Travels (Pvt) Ltd

27TH EDITION
SINCE 1981
UNPACK POTENTIAL IN PACKAGING
LANKAPAK 2026

23 24 25
OCTOBER 2026

நுண் மற்றும் சிறு அளவிலான கைத்தொழில்களுக்கான சிறப்பு அரங்கு

கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சு, இலங்கை பெக்கேஜிங் நிறுவனத்துடன் (SLIP) இணைந்து, லங்காபெக் கண்காட்சி 2026 இல் ஒரு விசேடத்துவ SME அரங்கிற்கு ஏற்பாடு செய்துள்ளது. இது பொதியிடல் துறையில் உள்ள நுண் மற்றும் சிறு அளவிலான தொழில்முனைவோர் தங்கள் உற்பத்திகள், தொழில்நுட்பங்கள் மற்றும் திறன்களைக் காட்சிப்படுத்தவும், புதிய சந்தை வாய்ப்புகளைக் கண்டறியவும் வாய்ப்பளிக்கிறது.

தகுதியான நுண் மற்றும் சிறு அளவிலான பொதியிடல் கைத்தொழில்களுக்கு இந்தச் சிறப்பு SME அரங்கில் சலுகைக் கட்டணத்தில் பங்கேற்க வாய்ப்பு வழங்கப்படும்.

கண்காட்சியாளர் தகுதிகள் (Exhibitor Profile)

பின்வரும் பிரிவுகளில் உள்ள உற்பத்தி கைத்தொழில்களிடமிருந்து அமைச்சு விண்ணப்பங்களைக் கோருகின்றது.

- பொதியிடல் உற்பத்தி
- காகிதம் மற்றும் அட்டைப் பொதியிடல்
- நெகிழ்வுத்தன்மை கொண்ட பொதியிடல்
- பிளாஸ்டிக் பொதியிடல்
- மடக்கக்கூடிய பொதியிடல் பொருட்கள்
- அச்சிடுதல் மற்றும் லேபிளிங் பொருட்கள்
- பொதியிடல் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள்
- ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் பிளாஸ்டிக்குகளுக்கான மாற்றுப் பொருட்கள்

நிலையான மற்றும் சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த பொதியிடல் பொருட்களை தயாரிக்கும் நுண் மற்றும் சிறு தொழில்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தெரிவு நடைமுறை

கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர் அபிவிருத்தி அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவினால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வு மூலம் விண்ணப்பங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு தெரிவு செய்யப்படும். மிகவும் பொருத்தமான விண்ணப்பதாரர்கள் விசேடத்துவ SME அரங்கில் பங்கேற்க தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

விண்ணப்பிப்பது எப்படி

ஆர்வமுள்ள தகுதியான நிறுவனங்கள் 2026 ஒக்டோபர் 12ஆம் திகதிக்கு முன்னதாக QR குறியீடு வழியாக உங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். (கூகுள் படிவ லிங்க்: https://forms.gle/58sUhAiTxtHs2SgcA)

மேலதிக தகவல்களுக்கு:
பணிப்பாளர் - அபிவிருத்திப் பிரிவு I
தொலைபேசி: 011-2422319
மின்னஞ்சல்: sector1@industry.gov.lk
இணையதளம்: www.industry.gov.lk

செயலாளர்
கைத்தொழில் மற்றும் தொழில்முனைவோர்
அபிவிருத்தி அமைச்சு
73/1, காலி வீதி, கொழும்பு 03

+94 76 966 2162 | lankapak@cdcevents.net | www.lankapak.com